**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 13.11.2024**

**O.S. 168/2021**

**வா.சா.1 யேசுநேசம்**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இன்று என்னுடன் என் கணவர் நீதிமன்றம் வந்துள்ளார் என்றாலும் நீதிமன்றத்திற்கு வெளியே நிற்கிறார் என்றாலும் சரி. இன்று நீதிமன்றத்தில் மின் துண்டிப்பு என்பதால் நானும் என் கணவரும் மூன்றாம் மாடியில் உள்ள இந்நீதிமன்றத்திற்கு நடந்து வந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் கணவர் தரப்பினர் இல்லை. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்வதற்கு முன்பு அரசு அலுவலரை பிரதிவாதியாக சேர்த்துள்ளதால் அவர்களுக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு எண்பது அறிவிப்பு அனுப்பவில்லையென்றால் சரியல்ல. நான் அறிவிப்பு அனுப்பவில்லையென்றாலும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

தென்தாமரைகுளம் கிராமத்தில் புல எண் 418/19 சி என்ற ஒரு புல எண் தற்போது இல்லையென்றால் ஆம் 418/9 சி என உள்ளது. என் பிராது பத்தி 5 ல் நான் 418/19 சி என நான் குறிப்பிட்டு விட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் அது தவறாக பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது. புல எண் 418/9 ன் விஸ்தீரணம் 50 சென்ட் என்றால் சரிதான். நான் அந்த புலத்தின் விஸ்தீரணம் என் வழக்கில் சொல்லவில்லையென்றாலும் அதன் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன்.

எனக்கு என் பெயரில் பிரதிவாதி வீட்டின் அருகாமையில் இடம் இல்லையென்றால் ஆம் என் கணவர் பெயரில் உள்ளது. தற்போது அந்த இடம் என் பிள்ளை பெயரில் உள்ளது. என் கணவரோ என் பிள்ளையோ இந்த வழக்கில் தரப்பினர் இல்லையென்றால் ஆம். 1ம் பிரதிவாதி இடத்தை தொட்டு 1ம் பிரதிவாதியின் தாய் தந்தை மற்றும் இரண்டு பெண்மக்கள் மனைவி 1ம் பிரதிவாதியின் மரஇழைப்பகத்தின் அருகே வசித்து வருகிறார்கள் என்றால் தற்போது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்து விட்டார் 1ம் பிரதிவாதி மர இழைப்பகம் இல்லை அது மரத்தை அறுக்கும் வேலை செய்கிறார்.

1ம் பிரதிவாதி மரதச்சு வேலை செய்யும் நபர் என்றால் அவர் முன்னர் மர தச்சு வேலை செய்யும் ஆசாரி தற்போது உரிமையாளராக உள்ளார். அவர் அந்த இடத்தில் மரசாதனங்கள் செய்து கொடுப்பார் என்றால் ஆம். என் மகன் பெயரில் உள்ள இடம் 1989 ல் வாங்கப்பட்டது. சொர்ணபாய் மரியம்மாளிடம் வாங்கப்பட்டதென்றால் பெயர் நியாபகம் இல்லை. அவர்களின் 23.5 சென்ட்டில் கீழ்மேல் சமபாகம் இரண்டாக தென்பாகம் 11 ¾ சென்ட் இடத்தை என்

கணவர் வாங்கி வீடு கட்டினார் என்றால் தெற்கு பக்கம் வாங்கினோம் அந்த இடத்தில் நடுவே வீடு கட்டினோம். எங்கள் வீட்டின் நேர் எதிரே பெபி உட் ஒர்க்ஸ் என்ற கடை உள்ளது என்றால் முன்னர் இருந்தது . தற்போது மூடிவிட்டார்கள். தற்போதும் அந்த கடை உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக அந்த கடை இல்லையென பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் வீட்டிற்கு அருகே ஐயாபழம் ரைஸ்மில் உள்ளது என்றால் முன்னர் என் வீட்டில்இருந்து 200 அடி தொலைவில் இருந்தது கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் அதனையும் மூடி விட்டார்கள். என் வீடு பிரத்தியேகமாக வீடுகள் இருக்கும் பகுதி அல்ல என்றாலும் அது வீடு மற்றும் வணிகம் தொழிற்சாலை அனைத்தும் சேர்ந்திருக்கும் ஒரு பகுதி என்றாலும் சரியல்ல. என் வீட்டின் அருகே மேபல் மாவு அரவை நிலையம் ராஜேந்திரன் உட் ஒர்க்ஸ், சகாதேவன் உட் ஒர்க்ஸ், பாலகிருஷ்ணன் ஆட்டு கடை , ஜி.பி.எம் ேஹாட்டல் , லகாய் ராய் கோழிகடை உள்ளது என்றால் சரியல்ல.

என் கணவர் 1ம் பிரதிவாதி நடத்திவரும் தொழில் நடத்துவதற்கு ஆட்சேபனை இல்லையென ஒரு தடையில்லா சான்று கொடுத்தார் என்றால் அப்போது 1ம் பிரதிவாதி கைதாழில் கூடம் நடத்த என் கணவர் ஆட்சேபனை இல்லையென தடையில்லா சான்று கொடுத்தார்.

1ம் பிரதிவாதி 1999 ஆம் வருடம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி , தெற்கு தாமரைகுளம் கிளையில் அரசு கடன் பெற்று சிறிய பிளேனர் கருவி வாங்கி சுற்றுசூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் சிறிய மரசட்டங்களில் துளையிடல் மற்றும் பொழி போடுதல் போன்ற சிறிய வேலைகள் செய்து வருகிறார் என்றால் இருக்கலாம். 1ம் பிரதிவாதி அவர் செய்யும் தொழிலுக்கு இந்திய அரசு குறுமற்றும் மீடியம் தொழில் அமைச்சகத்தில் சான்று பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதி செய்யும் தொழில் குடிசைதொழில் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி செய்யும் தொழிலுக்கு Tiny enterprises என நிரந்தர பதிவு எண் வழங்கியுள்ளதென்றால் அவ்வாறு சிறிய இயந்திரத்திற்கு என வழங்கி இருக்கலாம். 1ம் பிரதிவாதி அந்த தொழிலைஅவர் தாயாருக்கு 1976 ம் வருடம் வாங்கிய சொத்தில் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அவர் தாயார்பெயரிலான ஆவண எண்.2616/1976 கொட்டாரம் சார்பதிவலகம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் டோப்கோ கிராப்பிக்ஸ் வரைபடம் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் புகைப்படம் மற்றும் கணினி சம்மந்தமாக ஏதும் படித்துள்ளேனா என்றால் அவ்வாறு படிப்பு படிக்கவில்லை எனக்கு புகைப்படம் எடுக்க தெரியும் நான் புகைப்படத்துறையில் நிபுணர் இல்லையென்றால் ஆம். வா.சா.ஆ.4 புகைப்படத்திற்கும் 1ம் பிரதிவாதி Tiny enterprises க்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சாட்சி வா.சா.ஆ.4

புகைப்படங்களை பார்த்து விட்டு அதனை அவர் சமர்ப்பிக்கவில்லையென தெரிவித்தார். நான் தாக்கல் செய்துள்ள கடிதங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு ஒரு வழக்கு மூலத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக கேவியட் மனு தாக்கல் செய்துள்ளேன். சாட்சியிடம் ஒரு கேவியேட் மனு காட்டப்பட்டு அதிலுள்ள கையொப்பம் சாட்சியின் கையொப்பமா என கேட்கப்பட்டது சாட்சி அவருடைய கையொப்பம் என தெரிவித்தார் அந்த கேவியேட் கொடுத்ததாக நியாபகமில்லையென தெரிவித்தார்.

நானும் 1ம் பிரதிவாதியும் ஒரே சபையை சேர்ந்தவர்கள் என்றால் ஆம். கோயில் நிர்வாகத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக 1ம் பிரதிவாதியை நான் கஷ்டபடுத்த வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தற்போது சுமூகமான உறவு கிடையாது என்றால் ஆம். 1ம் பிரதிவாதி நடத்தும் Tiny enterprises சுற்றி அவர் சுவர் கட்டி சிமெண்ட் பூசி மேற்கூரை அமைத்து air tight அமைத்து சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் தொழில் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்து என தனியாக குறிப்பிடவில்லையென்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி நடத்தும் Tiny enterprises லிருந்து மாசோ சத்தமோ வராது என்றால் நான் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மின்வாரியத்தையோ மாசுகட்டுப்பாட்டு வாரியத்தையோ பஞ்சாயத்தையோ இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் ஆம். ஆனால் மனு செய்துள்ளேன். என் கணவர் நீதிமன்றத்தில் உண்மையை சொல்லி விடுவார் என்பதால் நான் என் பெயரில் வழக்கு தாக்கல் செய்து சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு பல நோய் உள்ளதாக சொல்வது பொய் என்றாலும் நான் ஆரோக்கியமாக உள்ளேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் இரண்டு மகள்களும் அவர் Tiny enterprises அருகே வீட்டில் வசித்து படித்து வருகிறார்கள் என்றால் ஆம். என் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.